Bundesamt
für Migration
und Flüchtlinge

# ஒருங்கிணைப்புவகுப்பிற்கான தகவல்தாள்

யேர்மனியில் பலகாலங்களாகவே வாழும் வெளிநாட்டுப்பெண்களுக்கும் ஆண்களுக்கும், ஒன்றியப் பெண் அல்லது ஆண்பிரசைகளுக்கும், ஐபொச–நாட்டைச்சேர்ந்த பிரசைகளுக்கும் அதுபோல் போதுமானவளவு யேர்மன்மொழிப் பாண்டித்தியம் அல்லாத யேர்மன்நாட்டுப்பிரசைகளுக்கும்

அன்புள்ள சககுடிமகளே, சககுடிமகனே,

நீங்கள் யேர்மனியில் வெளிநாட்டுப்பெண்ணாகவும் அல்லது ஆணாகவும் பலகாலங்களாக வசிப்பீர்களானால் அல்லது ஒன்றியப் பெண் அல்லது ஆண்பிரசையாகவும் அல்லது ஐபொச–நாட்டைச்சேர்ந்த பிரசையாகவுமிருந்தால் அல்லது யேர்மன்நாட்டுப் பெண் அல்லது ஆண்பிரசையாக போதுமானவளவு யேர்மன்மொழிப் பாண்டித்தியம் அல்லாதிருந்தால், நீங்கள் ஒருங்கிணைப்புவகுப்பின் பங்கேற்பிற்கான அனுமதி விண்ணப்பத்தை குடிவரவுக்கும் அகதிகளுக்குமான சமஷ்டித்திணைக்களத்தில் செய்யமுடியும்.

பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள், குமரப்பருவத்தவர்கள் அத்துடன் இளைஞர்கள் ஒருங்கிணைப்புவகுப்பில் பங்கெடுக்க முடியாது.

ஒருங்கிணைப்புவகுப்பென்றால் என்ன?

பொதுவான ஒருங்கிணைப்புவகுப்பு இரு பகுதியாகவுள்ளது, மொழிவகுப்பு அத்துடன் ஆற்றுப்படுத்தல் வகுப்பு.

மொழிவகுப்பில் நாளாந்த வாழ்க்கையில் நீங்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சொல்வளத்தைப் படிக்கிறீர்கள். அலுவலகங்களுடன் தொடர்புகொள்வதற்கும், அயலவர்களுடன் அத்துடன் வேலைத்தளத்தில் உரையாடுவதற்கும், கடிதங்கள் எழுதுவதற்கும் பத்திரங்கள் நிரப்புவதற்கும் என்பவை அதனில் உள்ளன.

ஆற்றுப்படுத்தல் வகுப்பு யேர்மனியல் வாழ்வது பற்றிய விடயங்களை உங்களுக்கு அறியத்தருகிறது. இதில் நீங்கள் சட்டஒழுங்கு, பண்பாடு அத்துடன் இந் நாட்டின் இளஞ் சரித்திரத்தையும் படித்துக்கொள்கிறீர்கள்.

பொதுவான ஒருங்கிணைப்புவகுப்பு 600 பாடப்பகுதிகளைக்கொண்ட மொழிவகுப்பும் (ஒரு பாடப்பகுதி 45 நிமிடங்கள் நடைபெறும்) அத்துடன் 100 பாடப்பகுதிகளைக் கொண்ட ஆற்றுப்படுத்தல் வகுப்பும் சேர்ந்த வகுப்பாகவுமிருக்கும். மொழிவகுப்பானது ஒவ்வொன்றும் 100 பாடவகுப்புக்களைக் கொண்ட ஆறு வகுப்புப்பாகவுள்ளது. முதலாவது 300 பாடவகுப்புகளை அடிப்படைவகுப்பு என அழைப்பார்கள், அதன்பின் தொடரும் 300 பாடவகுப்புகள் உயர்நிலைவகுப்புகள் எனப்படும்.

விசேடமான ஒருங்கிணைப்புவகுப்பு, குறிப்பாக பெண்களுக்கு, பெற்றோருக்கு, இளைஞர்களுக்கு அதுபோல் சரியானமுறையில் வாசிக்க எழுத, முடியாத நபர்களுக்கு நடைபெறுகின்றன. இவ் வகுப்பு 1.000 பாடப்பகுதிகளைக் கொண்டுள்ளன.

நீங்கள் அதி துரிதமாகப் படிப்பீர்களானால், நீங்கள் ஒரு துரிதவகுப்பில் பங்கெடுக்க முடியும். ஒருங்கிணைப்புவகுப்பு நடாத்தும் “வகுப்புவழங்குநர்” என்று அழைக்கப்படும் நிலையம் வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன் உங்களுக்கு ஒரு மதிப்பீட்டுச் சோதனை வைக்கும். அதில் நீங்கள் எந்த வகுப்பில் அத்துடன் வகுப்புப்பகுதியில் பொருத்தமாகச் சேர்ந்துகொள்ளலாம் என அறிந்துகொள்ளப்படும். அம் மதிப்பிட்டுச் சோதனை இலவசமானது.

KNr. 630.009o Tamilisch BAMF 05/2023

இறுதித்தேர்வில் பங்கேற்பு

இறுதிப்பரீட்சையானது ஒரு மொழிப்பரீட்சையுடன் ஆற்றுப்படுத்தல் வகுப்பின் இறுதியில் ''யேர்மனியில் வாழ்வு'' என்றழைக்கப்படும் பரீட்சையும் அடங்கியதாகவிருக்கும். நீங்கள் மொழிப்பரீட்சையில் போதுமானஅளவில் யேர்மன்மொழிப்பாண்டித்தியத்தை (மொழித்தரம் பீ1) நிரூபிப்பீர்களானால் அத்துடன் ''யேர்மனியில் வாழ்வு'' என்ற பரீட்சையில் சித்தியடைவீர்களானால், நீங்கள் ஒருங்கிணைப்புவகுப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்வீர்கள். நீங்கள் அதற்கு ''ஒருங்கிணைப்புவகுப்புச் சான்றிதள்'' பெற்றுக்கொள்வீர்கள்.

நீங்கள் ஒன்றில் அல்லது இரு பரீட்சைகளிலும் வெற்றிபெறவில்லையானால், நீங்கள் தேர்வுமுடிகளுடனான விபரத்தாள் பெற்றுக்கொள்வீர்கள்.

இறுதிப்பரீட்சைப் பங்குபேறு இலவசமானது.

ஒருங்கிணைப்புவகுப்பில் பங்கெடுப்பதன் நிமித்தத்தின் நன்மைகள்

ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்திராத ஒரு நாட்டிலிருந்து வரும் வெளிநாட்டுப்பெண்களும் ஆண்களும், ஒரு காலவரையறையற்ற வதிவிடஅனுமதிப்பத்திரத்தை யேர்மனியில் பெற்றுக்கொள்ள விரும்பினால், அவர்கள் சில தகமைகளைக் கட்டாயம் பூர்த்தல் வேண்டும். அதற்குக் குறிப்பாக போதுமானவளவு யேர்மன் மொழியில் பாண்டித்தியம் இருப்பதுடன் சட்ட– மற்றும் சமூகஒழுங்குவிதிகளிலும் அத்துடன் யேர்மனியில் வாழ்க்கைநடைமுறைகளிலும் அடிப்படைப் பாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டும். ஒருங்கிணைப்புவகுப்பை வெற்றிகரமாக நிறைவுசெய்வதன் மூலம் நீங்கள் இத் தகமைகளைப் பூர்த்திசெய்கிறீர்கள். மேலும் நீங்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப முன்பே பிரசாஉரிமை பெற்றுக்கொள்ளவும் இயலும். அதற்குமேலாக ஒருங்கிணைப்புவகுப்பில் பெறப்பட்ட யேர்மன்மொழிப் பாண்டித்தியம் யேர்மனியில் நாளந்தவாழ்கை இலகுவாக்குவதுடன் வேலைவாய்ப்பைக் கூட்டுவதற்கும் உதவுகிறது.

சமஷ்டித்திணைக்களத்தின் மூலம் ஒருங்கிணைப்புவகுப்பின் பங்கேற்பிற்கான அனுமதியும் வகுப்புவழங்குநரிடம் பதிவும்

தயவுசெய்து நீங்கள் அனுமதிக்கான விண்ணப்பத்தை முழுமையாகவும் நன்றாக வாசிக்ககூடியதாகவும் நிரப்புங்கள். உங்களால் குறிப்பிடும் விலாசம் வேறொருவரின் பேரில் இருக்குமானால், கட்டாயம் ''தேவையெனில் இவருடன் வாழுகிறார் (c/o)'' என்ற கூட்டை நிரப்பவும், அப்படியில்லாவிடின் கடிதம் உங்களுக்குக் கிடைக்கமுடியாது. விண்ணபத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஆவணங்களை நீங்கள் இணைத்து அதை அதில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பவும்.

நீங்கள் ஒருங்கிணைப்புவகுப்புப் பங்கேற்பிற்கு அனுமதிக்கப்படுவீர்களானால், நீங்கள் சமஷ்டித்திணைக்களத்திலிருந்து ஒருங்கிணைப்புவகுப்புப் பங்கேற்பிற்பு உரிமை பற்றிய ஒரு உறுதியாக்கம் என்றழைக்கப்படும் ''உரிமைச்சீட்டைப்'' பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்கு அருகிலுள்ள வகுப்புவழங்குநர் அத்துடன் வகுப்புநடைபொறும் இடம் அதுபோல் உங்களுக்குப்பொறுப்பான சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தை பின்வரும் இணையத்தளத்தில் கண்டுகொள்ளலாம்:

https://bamf-navi.bamf.de/de/

உங்கள் ஒருங்கிணைப்புவகுப்பிற்கான அனுமதி ஒரு வருடம் செல்லுபடியாகும். உறுதியாக்கத்தில் „பங்கேற்புஉரிமை இதுவரை செல்லுபடியாகும்…“ என்பதற்குக்கீள் ஒரு திகதி இருக்குமானால், நீங்கள் கட்டாயம் அதில் உள்ள திகதிக்கு முன் ஒரு வகுப்புவழங்குநரிடம் அல்லது உங்களுக்குக் கூறப்பட்ட நிலையத்தில் பதிவுசெய்யவேண்டும். தயவுசெய்து உங்களை ஒருங்கிணைப்புவகுபிற்கு உங்களுக்கு குறிப்பிடப்பட்ட நிலையத்தில் பதிவுசெய்யவும் அத்துடன் அங்கு உங்கள் உரிமைச்சீட்டைக் கையளிக்கவும். உங்களுக்கு எந்தவித நிலையமும் குறிப்பிடப்படாமலிருந்தால், நீங்கள் உங்களைக் காலதாமதமின்றி உங்களால் தெரிவுசெய்யப்படும் வகுப்புவழங்குநரிடம் பதிவுசெய்யவும்.

காலதாமதமின்றிய பங்கேற்பை நடைமுறைப்படுத்துவதற்காக சமஷ்டித்திணைக்களம் உங்களை ஒரு குறிப்பிட்ட வகுப்புவழங்குநரிடம் அனுப்பும்.

வகுப்புவழங்குநர் வகுப்பின் அநேகமான ஆரம்பத்தை உங்களுக்கு கட்டாயம் கூறவேண்டும். வகுப்பு உங்கள் பதிவிலிருந்து ஆறு கிழமைக்குள் ஆரம்பமாகவேண்டும். இக் காலத்திற்குள் வகுப்பேதும் ஆரம்பிக்கப்படாவிடின், அதை வகுப்புவழங்குநர் உங்களுக்குக் கட்டாயம் அறியத்தரவேண்டும்.

தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள், அதாவது நீங்கள் உங்களின் சொந்தக்காரணங்களால் பதிவிற்குப்பின் ஒரு வருடத்திற்குள் ஒரு ஒருங்கிணைப்புவகுப்பை ஆரம்பிக்காமலிருப்பீர்களானால் அல்லது வகுப்புப்பங்கேற்பு ஒரு வருடத்திற்கு மேல் இடைநிறுத்துவீர்களானால், உங்கள் பங்கேற்புஉரிமை அழிக்கப்படும்.

ஒழுங்கான வகுப்புப்பங்கேற்பு

நீங்கள் ஒருங்கிணைப்புவகுப்பின் இலக்கை அடைவதற்காக, ஒழுங்காக அவ்வகுப்புகளில் கலந்துகொள்ளல்வேண்டும். அதன் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் வகுப்புகளுக்கு ஒழுங்காக இவை முடிவுபெறும்வரை செல்லவேண்டும் அத்துடன் இறுதிப்பரீட்சையில் பங்கேற்கவேண்டும். வகுப்புவழங்குநர் உங்கள் ஒழுங்கான பங்கேற்பை நீங்கள் விரும்பினால் எழுத்துமூலம் உறுதிசெய்வார்.

குழந்தைப்பராமரிப்பு

சிலசமயம் உங்கள் ஒருங்கிணைப்புவகுப்பிற்குச் செல்வதற்கு குழந்தைப்பராமரிப்பு தேவைப்பட்டால், தயவுசெய்து வகுப்புவழங்குநரை நாடவும். அவர் உங்களுக்கு இயலுமான பராமரிப்புவாய்ப்புகளை அறியத்தருவார்.

வகுப்புவழங்குநரை மாற்றுதல்

வகுப்புவழங்குநரை மாற்றுதல் அடிப்படையாக ஒரு வகுப்புப்பகுதியின் முடிவின் பின்தான் அனுமதிக்கப்படும். மாற்றம் விசேட காரணங்களால் மாத்திரம் இயலுமாகும், குறிப்பாக ஒரு வீடுமாறும் சந்தர்ப்பத்தில், பகுதிநேரத்திலிருந்து முழுநேரவகுப்புகள், குழந்தைப்பராமரிப்பை நிறைவேற்றுவதற்கு அல்லது தொழில்படிப்பைத் தொடங்குவதற்கு அல்லது ஒரு வகுப்புப்பகுதி முடிவின் பின் வேலைசெய்தல்.

வேறு காரணங்களின் மாற்றத்தால் நீங்கள் செல்லாத வகுப்புப்பகுதிகளின் பாடவகுப்புகள் இழக்கப்பட்டுவிடும்.

அனுமதியுள்ள மாற்றம் ஏற்படின் வகுப்புவழங்குநர் உங்களுக்க உரிமைச்சீட்டை கட்டாயம் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

ஒருங்கிணைப்புவகுப்பிற்கான செலவுகள்

நீங்கள் 2,29 ஒய்ரோ தொகையை ஒவ்வொரு பாடமணித்தியாலத்திற்கும் ஒரு செலவுப்பங்களிப்பாக வகுப்புவழங்குநரிடம் செலுத்தவேண்டும். இச் செலவுப்பங்களிப்பை ஒவ்வொரு 100 பாடமணித்தியாலம் அடங்கிய வகுப்புப்பகுதிகள் ஆரம்பமாகும் முன்பும் ஆற்றுப்படுத்தல் வகுப்பிற்கு முன்பும் செலுத்தவேண்டும். நீங்கள் பாடங்களுக்குச் செல்லாவிடின், செலவுப்பங்களிப்பு நீங்கள் செல்லாத வகுப்பு மணித்தியாலங்களுக்கு வழங்கப்படமாட்டாது. உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாவிடின், உங்களுக்கு வாழ்கைச்செலவுக்குக் கடமைப்பட்டுள்ள நபரால் அச் செலவுப் பங்களிப்பு கட்டாயம் செலுத்தப்படவேண்டும்.

நீங்கள் குடிமக்கள்பணம் அல்லது வாழ்க்கைச் செலவிற்கான உதவி (சமூகநலஉதவி) பெற்றுக்கொள்வீர்களானால் அல்லது நீங்கள் வேறுகாரணங்களால் நிதிஉதவி தேவைப்படுபவராகவிருந்தால், நீங்கள் செலவுப்பங்களிப்பிலிருந்து விலக்கப்படலாம். நீங்கள் வேலைசெய்வீர்களானால் அத்துடன் உங்கள் மொத்தமாதச்சம்பளம் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தாண்டவில்லையென்றால், உங்களுக்குக் குழந்தைகள் இருக்குமானால், அது மேலதியமாகும், நீங்கள் வேறுவிதத்திலும் செலவுப்பங்களிப்பிலிருந்து விலக்கப்படலாம். நீங்கள் மேலதிகவிபரங்களையும் அத்துடன் துல்லியமான வருடாவருடம் மாற்றமாகும் கட்டணங்களையும் அவைபோல் நடைமுறையிலுள்ள விண்ணப்பப்படிவத்தையும் இங்கு https://www.bamf.de/ik-kostenbefreiung பெற்றுக்கொள்ளலாம். செலவுப்பங்களிப்பிலிருந்து விலக்கலை நீங்கள் உங்களுக்குப் பொறுப்பான சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தில் எழுத்துமூலம் கட்டாயம் செய்தல் வேண்டும்.

நீங்கள் உங்கள் நிதிரீதியான தேவைநிலையின் ஆதாரங்களை தயவுசெய்து இணைக்கவும் (அதுபற்றிய விபரத்தாளின் பிரதிகள், உதாரணமாக வேலையில்லாதவர்பணத்தின் அல்லது குடிமக்கள்பணத்தின், சமூகநலஉதவியின் அறிவிப்புஅறிக்கை, நடைமுறையிலுள்ள சம்பளப்பட்டியல்/செல்லுபடியாகும் மாதமொத்தச்சம்பளம் நிரூபிக்கும் வேலைஒப்பந்தம், அதுபோல் சகல குழந்தைகள்சலுகைப்பணத்தொகைகளும் உள்ள ஆதாரங்கள், இறுதி சம்பளவரிவிபரத்தாள் அல்லது ஈஎல்எஸ்விஎம் மூலமான சொந்தவிரங்கள், வீட்டுச்சலுகைப்பணம், பாபொக், குழந்தைகள்சலுகைமேல்பணம், அரசியல்தஞ்சவிண்ணப்பத்தினா் பணச்சட்டத்திற்கு இணங்க வழங்கும் பணம், குழந்தைகள்பாடசாலைக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டது, வானொலிதொலைக்காட்சிக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டது, நகர சமூகநலபோக்குவரத்துச்சீட்டு முதலியன).

தயவுசெய்து விண்ணப்பத்தை நீங்கள் இயலுமானவரை வகுப்புஆரப்பத்திற்கு முன் செய்யவும். நீங்கள் விண்ணப்பத்தை வகுப்பு நடைபெறும் போது செய்வீர்களானால், கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படுவது அடிப்படையில் வகுப்புஆரம்பத்திலிருந்து பின்முறையில் வழங்கப்படமாட்டாது.

போக்குவரத்துச்செலவுகள்

நீங்கள் சமஷ்டித்திணைக்களத்தால் செலவுப்பங்களிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பீர்களானால், நீங்கள் உங்கள் ஒருங்கிணைப்புவகுப்பிற்கான போக்குவரத்துச் செலவிற்கு ஒரு சலுகைப்பணம் பெற்றுக்கொள்ளமுடியும். இச் சலுகைப்பணம் ஒரு குறிப்பிட்ட தொகையான முறையில் வழங்கப்படுகிறது. அதற்கான தகமை எப்போதும் என்னவென்றால், வகுப்புநடைபெறும் இடம் உங்கள் வீட்டிலிருந்து குறைந்தது 3 கிமீ தூரத்தில் இருக்கவேண்டும். போக்குவரத்துச்சலுகைப்பணத்திற்கு நீங்கள் ஒரு விண்ணப்பத்தை அதற்குப்பொறுப்பான சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தில் கட்டாயம் செய்தல் வேண்டும்.

அதனை நீங்கள் பின்வரும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்: https://bamf-navi.bamf.de/de/.

மொழிவகுப்பின் கூடியது 300 பாடப்பகுதிகளை மீண்டும் படித்தல்

நீங்கள் ஒரு குறிப்பிட்ட தகமைகளில் ஒருதரம் மொழிவகுப்பின் 300 பாடப்பகுதிகளை மீண்டும் படிக்கலாம். அதற்கு நீங்கள் கட்டாயம் மொழிவகுப்பில் முழுமையாப் பங்கேற்றிருக்கவேண்டும், அதன் முடிவில் ஒரு மொழிப்பரீட்சை எடுத்திருக்கவேண்டும் அத்துடன் அதில் போதுமானஅளவில் யேர்மன்மொழிப்பாண்டித்தியத்தை (மொழித்தரம் பீ1) நிரூபிக்காமலிருப்பீர்களானால்.

மீண்டும்படிக்கும் மணித்தியாலங்களின் பங்கேற்பிற்கு ஒரு விண்ணப்பம் தேவையானது. தயவுசெய்து நீங்கள் அதை உங்கள் வதிவடத்திற்குப் பொறுப்பான சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தில் செய்யவும்.

நீங்கள் ஒரு எழுத்துப்படிக்கும்வகுப்புச் செல்வீர்களானால், அதனுடன் ஆரம்பமாகும் வகுப்பை மீண்டும் படிப்பதற்கு உங்களுக்கு மொழிப்பரீட்சைப் பங்கேற்பு 300 பாடபகுதிகளை மீண்டும் செய்து முடிப்பதற்குத் தேவையில்லை.

செலவுப்பங்களிப்பை திருப்பப்பெற்றுக்கொள்வதற்கு

உங்கள் பங்கேற்புஉரிமை 31.01.2023 வரைக்குள் வழங்கப்பட்டிருந்தால், அது செல்லுபடியாகும்:

நீங்கள் 08.12.2007 க்குப் பின் இறுதிப்பரீட்சையில் வெற்றிகரமாகப் பங்கேற்றிருந்தால் அத்துடன் முதல்முதல் உங்கள் பங்கேற்புஉரிமை வழங்கப்பட்டதற்கும் இறுதிப்பரீட்சைக்கும் இடையில் இருவருடங்களுக்கு மேல் கடந்திருக்காதிருந்தால், சமஷ்டித்திணைக்களம் உங்களுக்கு செலுத்தப்பட்ட செலவுப்பங்களிப்பின் 50 % திருப்பிக் கொடுக்கும். நீங்கள் திருப்பப்பெற்றுக்கொள்வதற்கு ஒரு விண்ணப்பத்தை சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தில் கட்டாயம் செய்தல் வேண்டும்.

01.02.2023ல் இருந்து வழங்கப்பட்ட பங்கேற்புஉரிமைக்கு, நீங்கள் ஒரு பொதுவான ஒருங்கிணைப்புவகுப்பில் பங்கேற்றிருப்பீர்களானால், அதற்கான காலக்கெடு இரண்டு வருடங்களாகும்.

நீங்கள் ஒரு விசேட ஒருங்கிணைப்புவகுப்பில் (உதாரணமாக எழுத்துப்படிக்கும்வகுப்பு, இரண்டாவதுஎழுத்துப்படிப்பவர்வகுப்பு, பெற்றோர்– அல்லது பெண்கள் ஒருங்கிணைப்புவகுப்பு, இளைஞர்கள் ஒருங்கிணைப்புவகுப்பு) பங்கேற்றியிருப்பீர்களானால், காலக்கெடு மூன்று வருடங்களாகவிருக்கும்.

இதைத்தவிர நீங்கள் எதை அறியவேண்டும்

இந்தத் தகவல்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விண்ணப்பப்படிவங்களையும் நீங்கள் உங்கள் வகுப்புவழங்குநரிடமிருந்தும், உங்கள் வெளிநாட்டவர்அலுவலகத்திலிருந்தும் அல்லது உங்கள் வதிவிடத்திற்குப் பொறுப்பான சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அதைவிட நீங்கள் பத்திரங்களை இணையத்தளத்தில் கண்டுகொள்ளலாம்: https://www.bamf.de/formulare.

நீங்கள் உங்கள் விண்ணப்பங்களை டிஜிட்டல் முறையில் சமஷ்டித்தளத்தின் மூலம் சமஷ்டித்திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கலாம்.

பின்வரும் விண்ணப்பங்கள் டிஜிரல் முறையில் பயன்படுத்தத் தயாராகவுள்ளன:

- ஒருங்கிணைப்புவகுப்பின் பங்கேற்பிற்கான அனுமதி விண்ணப்பம்
- மொழிவகுப்பின் 300 பாடமணித்தியாலங்களைத் திரும்பச்செய்யவதற்கான அனுமதி விண்ணப்பம்
- ஒருங்கிணைப்புவகுப்பிற்கான செலவுப்பங்களிப்பு விடுவிக்கப்படுவதற்கான விண்ணப்பம்
- போக்குவரத்துச்செலவுச்சலுகைப்பணம் வழங்குவதற்கும் அதனுடன்சேர்ந்து அதிகளவு நாள்பொதுப்பணம் வழங்குவதற்கான விண்ணப்பம்
- செலவுப்பங்களிப்பின் திருப்பிக் கொடுத்தலக்கான (50 %) விண்ணப்பம்

இந்த இணையத்தள விலாசத்தின் மூலம் நீங்கள் சமஷ்டித்தளத்தின் ஒன்லைன்–விண்ணப்பங்களுக்குச் செல்லமுடியும்:

Internetadresse zu den Online-Anträgen

சகல மேலதிக ஒன்லைன்–விண்ணப்பம் செய்வதற்கான விபரங்களை நீங்கள் இதன் மூலம் காணலாம்:

Internetadresse zu Informationen zur Online-Antragstellung

தயவுசெய்து நீங்கள் மேலதிக விபரங்களுக்கு குடிவரவுஆலோசனைநியையங்களின் சலுகைகளையும் அத்துடன் இளைஞர்கள்குடிவரவுச் சேவைகளையும் நாடுங்கள். இவைகள் உங்களுக்கு விண்ணப்பங்கள் நிரப்புவதற்கு உதவிபுரிவதுடன், உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதுடனும் உங்கள் பிரச்சனைகளையும் சரிபார்ப்பதுடனும் உங்களுக்குப் பொருத்தமான ஒருங்கிணைப்புவகுப்பினை உங்களுக்காகத் தேடுவார்கள். எங்கு குடிவரவுஆலோசனைநியையங்கள் அத்துடன் இளைஞர்கள்குடிவரவுச் சேவைகள் உங்கள் அருகில் உள்ளனவென்பதை, உங்கள் வெளிநாட்டவர்அலுவலகத்திலோ, சமஷ்டித்திணைக்களத்தின் பிராந்தியஅலுவலகத்திலோ அல்லது இணையத்தளத்தின் மூலமோ அறிந்துகொள்ளலாம் https://bamf-navi.bamf.de/de/.

இந்தத் தகவல்தாள் உங்களுக்காக முக்கிய ஒருங்கிணைப்புவகுப்புப் பங்கேற்பிற்கான விபரங்களை கொண்டுள்ளன. மேலதிக கேள்விகளுக்கு உங்கள் வகுப்புவழங்குநர் பதிலளிப்பார்.

ஒருங்கிணைப்புவகுப்பில் நீங்கள் படிக்கும்போது உங்களுக்கு சட்டரீதியிலான விபத்துக்காப்புறுதி இருக்கமாட்டாது.

ஒருங்கிணைப்புவகுப்பில் படிப்பதில் நீங்கள் அதி வெற்றிபெறவேண்டுமென்று நாங்கள் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றோம்!